**PUBLIC (ELECTIONS-I) DEPARTMENT**

**PRESS RELEASE**

The Election Commission of India has announced the Special Summary Revision, 2021 with reference to 01.01.2021 as the qualifying date. In this connection, a meeting with recognized National and State political parties in Tamil Nadu was conducted on 03.11.2020 by Thiru. Satyabrata Sahoo, IAS, Chief Electoral Officer, Tamil Nadu.

2. During the meeting the political parties were informed about the disposal of forms during continuous updation of electoral rolls and also about the schedule for SSR 2021.

3. From the date of publication of final rolls, 2020 (i.e. 14.2.2020) at total number of 9,48,512 claims and objections have been received upto 31.10.2020 including 2,44,808 Form 6 applications (for new inclusion), 4,88,787 Form 7 application s(for deletion) 1,82,886 Form 8 applications (for correction) and 31,938 Form 8A applications (for transposition within the same AC) were received during the period. Online applications accounted for 84%, 82% and 76% of the total applications received for Form 6, Form 8 and Form 8A respectively.

4.The SSR 2021 will be conducted based on the following schedule.

| | |
|---|---|
| Publication of Integrated Draft Electoral Roll | 16-11-2020 |
| Period for filing claims and Objections | From 16-11-2020 till 15-12-2020 |
| Special Campaign Dates | 21-11-2020(Saturday), 22-11-2020(Sunday) and 12-12-2020(Saturday), 13-12-2020(Sunday) |
| Final Publication of Electoral Roll | 20-01-2021 (Wednesday) |
| National Voters Day | 25-1-2021 |

5. As per ECI instructions, the recognized political parties can appoint Booth Level Agents (BLAs) for each polling station. The BLAs can assist the Booth Level Officers (BLOs) in identifying corrections, etc on special campaign days. BLAs can list out the dead and shifted electors and present the list to the BLOs in the formats prescribed by the Election Commission of India.

6. A brief power point on the various activities and schedules for SSR 2021 was presented before the political party representatives. Suggestions from the representatives were also heard during the meeting.

**CHIEF ELECTORAL OFFICER**
**TAMIL NADU**

<u>பொது (தேர்தல்கள்.1)த் துறை</u>

## செய்தி வெளியீடு

இந்தியத் தேர்தல் ஆணையம் 01.01.2021 –யை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை அறிவித்துள்ளது. இது தொடர்பாக தலைமைத் தேர்தல் அதிகாரி திரு சத்ய பிரத சாஹூ, இஆப அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

2. இக்கூட்டத்தில் தொடர் திருத்தத்தின் போது முடிவு செய்யப்பட்ட படிவங்கள் பற்றிய தகவல்களும், சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2021 –இன் கால அட்டவணைகளும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

3. 2020 –ஆம் ஆண்டிற்கான இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட 14.2.2020 ஆம் தேதி முதல் 31.10.2020 வரை கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் தொடர்பாக மொத்தம் 9,48,512 படிவங்கள் பெறப்பட்டன. இதில் 2,44,808 படிவம் 6 –ம் (புதிதாக பெயர் சேர்த்தல், ஒரு சட்டமன்ற தொகுதியில் இருந்து வேறொன்றுக்கு இடம் பெயர்தல்), 4,88,787 படிவம் 7-ம் (பெயர் நீக்குதல்), 1,82,886 படிவம் 8-ம் (திருத்தம்) மற்றும் 31,938 படிவம் -8 A –ம் (ஒரே தொகுதிக்குள் பெயர் மாற்றம்) ஆகியவை அடங்கும். மேற்குறிப்பிட்ட காலத்தில் இணைய வழியாக பெறப்பட்ட படிவங்கள் 6, 8 மற்றும் 8 A ஆகியவற்றின் சதவிகிதம் முறையே 84, 83 மற்றும் 77 ஆகும்.

4. இந்திய தேர்தல் ஆணையம் கீழ்க்கண்ட கால அட்டவணையை 2021 சிறப்பு சுருக்க முறை திருத்தத்திற்காக அறிவித்துள்ளது.

| | |
|---|---|
| ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள்: | 16-11-2020 |
| கோரிக்கை மற்றும் மறுப்புரைகள் விண்ணப்பிக்கும் காலம் | 16-11-2020 முதல் 15-12-2020 வரை |
| சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்கள் | 21-11-2020 (சனிக்கிழமை), 22-11-2020 (ஞாயிற்றுக் கிழமை) மற்றும் 12-12-2020 (சனிக்கிழமை), 13-12-2020 (ஞாயிற்றுக் கிழமை) |
| இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் : | 20-01-2021 (புதன் கிழமை) |
| தேசிய வாக்காளர் தினம் | 25-1-2021 (திங்கள் கிழமை) |

5. இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் வாக்குச் சாவடி நிலை முகவர்களை (BLA) நியமிக்கலாம். அம்முகவர்கள் சிறப்பு முகாம்கள் நடக்கும் தேதிகளில் வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்கு வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள விவரங்களை சரிபார்க்க உதவி செய்யலாம். முகவர்கள், வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இறந்த மற்றும் இடம் பெயர்ந்த வாக்காளர்கள் பற்றி வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்கு இந்திய தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட படிவங்களில் தகவல் வழங்கலாம்.

6. இக்கூட்டத்தில் சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2021 –இன் பலவித வழிமுறைகள் மற்றும் கால அட்டவணைகள் பற்றி விளக்கப்பட்டது. அரசியல் கட்சி பிரதிநிதிகளின் ஆலோசனைகளும் இக்கூட்டத்தில் பெறப்பட்டன.

**தலைமை தேர்தல் அதிகாரி**
**தமிழ்நாடு**